## தமிழ்நாடு முதல்வரின் தன்னிகரில்லாக் கனவு நிறைவேறும்!

# 2030 க்குள் தமிழ்நாடு 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறும்!

### வேளாண்மை சாராத வேலைவாய்ப்புகள் குறித்த மாநில திட்டக்குழுவின் 4 அறிக்கைகளை முதல்வரிடம் சமர்ப்பித்து – மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் உறுதி!

**சென்னை, ஜீன் 11 -**

**மாநில திட்டக்குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன் அவர்கள், மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட 4 அறிக்கைகளை முதலமைச்சரும், மாநில திட்டக் குழுவின் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (9.6.2025) தலைமைச் செயலகத்தில் சமர்ப்பித்த பிறகு அளித்த செய்தியாளர் சந்திப்பில், “தமிழ்நாடு முதல்வரின் தன்னிகரி ல்லாக் கனவு நிறைவேறும்!” என்றும் “2030 க்குள் தமிழ்நாடு 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறும்!” என்றும் குறிப்பிட்டார்.**

**அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:**

இன்று காலையில் மாநில திட்டக் குழுவின் சார்பில் தயாரிக்கப்பட்ட 4 அறிக்கைகளை முதலமைச்சர் அவர்களிடம், மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவர் என்கின்ற வகையில் நானும், துணை முதலமைச்சரும், மாநில திட்டக் குழுவின் அலுவல்சார் துணைத் தலைவரும் இணைந்து வழங்கினோம்.

அதில் முதல் அறிக்கை - தமிழ்நாட்டில் இருக்கும் கிராமப்புறங்களில் ஏற்பட்டிருக்கும் வேளாண்துறை அல்லாத வேலை வாய்ப்புகள் அதில் எப்படி நடந்திருக்கிறது, எவ்வளவு அதிகமாகியிருக்கிறது, எவ்வளவு குறைந்திருக்கிறது என்பது குறித்த ஆய்வு.

இந்த ஆய்வு எப்படி மேற்கொண்டோம் என்றால், 10 வருடங்களுக்கு முன்பு நான் தனிப்பட்ட முறையில் ஒன்றிய திட்டக்குழுவிற்காகச் செய்த ஆய்வு. 12 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த 12 கிராமங்களில், வேளாண் துறையில் இல்லாத வேலை வாய்ப்புகள் பற்றி ஆய்வு செய்தோம். அதே கிராமங்களுக்குச் சென்று இந்த 10 வருடங்களின் இடைவெளியில் எது போன்ற மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்பது குறித்து, ஒரு மீள் ஆய்வு மேற்கொண்டு அந்த ஆய்வின் அடிப்படையில் அறிக்கை தயாரிக்கப்பட்டு இன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் ஆய்வறிக்கையை சமர்ப்பித்தோம்.



#### சில இலக்குகள்!

இரண்டாவது ஆய்வறிக்கை - sustainable development goals என்று சொல்லக்கூடிய வளம் குன்றாத வளர்ச்சி இலக்குகள் குறித்து ஐக்கிய அமைப்புகளின் வழிமுறைகளின்படி அறிக்கை தயாரிக்கப்பட்டு நம் தமிழ்நாடு தற்போது எங்கிருக்கிறோம். 2030-க்குள் அதற்கு சில இலக்குகள் இருக்கின்றன. அந்த இலக்குகளை நாம் எவ்வளவு தூரம் அடைந்திருக்கிறோம், இன்னும் செல்ல வேண்டிய தூரம் எவ்வளவு என்பது பற்றி ஆய்வு செய்து அதற்குப் பிறகு அந்த இலக்கை அடைய வேண்டும் என்றால், என்ன செய்ய வேண்டும் என்பதையும் திட்டமிட்டு 650 பக்கத்திற்கு மேலான அறிக்கையை நமது முதலமைச்சர் அவர்களிடம் வழங்கியிருக்கிறோம். அதில் எதிலெல்லாம் முதலிடத்தில் இருக்கிறோம். எதிலெல்லாம் முன்னணியில் இருக்கிறோம், எதிலெல்லாம் நன்றாக வேலை செய்துகொண்டிருக்கிறோம். இன்னும் நாம் கவனிக்க வேண்டிய துறைகள் எவை? என்பதையெல்லாம் கண்டறிந்து அதையும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டு, அரசுக்கு அளித்துள்ளோம்.

#### தொழில்நுட்ப மாற்றங்கள்!

மூன்றாவது அறிக்கை - உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். தமிழ்நாடு வாகன உற்பத்தியில் முன்னிலையில் இருக்கும் மாநிலம். அந்த வாகன உற்பத்தியை அனைத்து தொழில்நுட்பத்திலும் ஏற்படக்கூடிய மாற்றங்கள் போல் வாகன உற்பத்தியிலும் மிகப்பெரிய அளவில் தொழில் நுட்ப மாற்றங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.

10, 15 வருடங்களுக்கு முன்பு காரை பார்த்தோம் என்றால், முழுவதும் Mechanical Device ஆக இருந்தது என்ற காலம் மாறி, இப்போது ஒரு கார் அல்லது மோட்டார் சைக்கிள் எடுத்துக் கொண்டோம் என்றால், பாதிதான் Mechanical, பாதி Electronics ஆக மாறி இருக்கிறது. அதில் இன்னும் அதிகமாக்கிக்கொண்டுதான் செல்லும் என்று எதிர் பார்க்கின்ற சூழலில், மின் வாகனமாக மாறிக் கொண்டிருக்கிறது. Hybrid வந்துகொண்டிருக்கிறது. இப்படி பல தொழில்நுட்ப மாற்றங்கள் அசுர வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்தில், அதில் நாம் முன்னணி இடத்தை தக்கவைத்துக்கொள்வதற்குநமதுமாநிலம்என்னவெல்லாம் செய்ய வேண்டும், அதற்கான செயல் திட்டங்கள் என்னென்ன தேவைப்படுகின்றன என்பது குறித்து ஆய்வை நடத்தி, ஆய்வரங்கத்தை நடத்தி அதில் வந்திருந்த நிபுணர்கள் என்னவெல்லாம் கூறினார்கள் என்பதைத் தொகுத்து அதனை ஒரு அறிக்கையாகத் தயாரித்து - நமது எதிர்காலம் வாகன உற்பத்தியில் என்னவாக இருக்க வேண்டும் என்பது குறித்தும், அதற்கு உண்டான பாதை என்ன? வழி என்ன? வகை என்ன? என்பது குறித்தும் தெளிவாக எழுதி அதையும் ஒரு அறிக்கையாக அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறோம்.

நான்காவது அறிக்கை - Knowledge Academy என்று சொல்லக்கூடிய பெரும் பாய்ச்சலை தமிழ்நாடு நிகழ்த்த வேண்டும். இந்தியாவிலேயே உயர் கல்வி படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் தான் அதிகம் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். இந்திய அளவில் சராசரியாக 26% என்று சொன்னால், தமிழ்நாட்டில் 47% என்ற அளவில் இருப்பதாகத் தான் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அப்படி இருக்கும்போது நமது மாணவர்களும், மாணவிகளும் உயர்கல்விக்குப் போகும்போது சாதாரண வேலைவாய்ப்புகள் அல்லாமல், அவர்களுக்கு உண்டான உயர்ந்த வேலை வாய்ப்புகள். ஒருபக்கம் - சுமாராகப் படிப்பவர்களுக்கு அல்லது டிகிரி படித்தவர்களுக்கான வேலைவாய்ப்பும், Highly Technical Qualify ஆகியிருப்பவர்களுக்கு உயர்ந்த சம்பளம் வரக் கூடிய அதிக வருமானம் வரக்கூடிய வேலைவாய்ப்புகள். High Paying Job என்ற வாய்ப்புகள் வரக்கூடிய RND போன்ற துறைகளில் வேலை செய்வதற்கு உலக அளவில் பெரிய, பெரிய நிறுவனங்கள் என்ன செய்கிறார்கள் என்றால், அவர்களின் ஆராய்ச்சிப் பணிகளை இந்தியாவை நோக்கி நகர்த்திக்கொண்டிருக்கிறார்கள். ஏன் என்றால், ஒன்று இங்கு Talent Pool அதிகமாக இருப்பது. இரண்டாவது இவ்வளவு Talent இருக்கும் இடங்கள் உலகத்தில் வேறு எங்கும் இல்லை என்ற அடிப்படையில் இந்தியா உலகத்திற்கே உண்டான Global Capability Centres என்பது இந்தியாவில் பெரிய அளவில் நிறுவப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

#### பெரு முயற்சி!

அதில், குறிப்பாக பெங்களூர், ஹைதராபாத், புனே போன்ற இடங்கள் முன்னணியில் இருக்கும்போது தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளாக நாம் பெருமுயற்சி செய்து 40, 50 என்று இருந்த Global Capability Centres-இன் எண்ணிக்கை இப்போது 150-க்கும் மேலாக உயர்த்தியிருக்கிறோம். அப்போது எதிர்காலம் இன்னும் என்னவான வாய்ப்புகளை வழங்குகிறது. அதற்கு நாம் என்னவெல்லாம் செய்ய வேண்டும். இன்னும் பல நிறுவ னங்களை எப்படி ஈர்ப்பது என்பது குறித்தும் அந்த ஆய்வை மேற்கொண்டு அந்த ஆய்வின் அறிக்கையும் கொடுத்திருக்கிறோம்.

மேற்கண்ட 4 அறிக்கைகள் தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நான்கு அறிக்கையையும் ஒன்றாக இணைத்துப் பார்த்தீர்களென்றால், முதலமைச்சர் அவர்கள் வைத்திருக்கும் இலக்கான 1 டிரில்லியன் பொருளாதாரம் என்ற இலக்கினை நோக்கிச் செல்வதற்கு வெவ்வேறு துறைகளில் நாம் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது என்பதையும், அதே சமயத்தில் 1 டிரில்லியன் பொருளாதாரம் அடையும்போது அது எல்லோருக்குமானதாக இருக்க வேண்டும், எல்லோரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதையும் உறுதி செய்வதற்காகதான் SDG (Sustainable Development Goals) அதற்கான ஆய்வறிக்கையும் தயாரித்து வழங்கியிருக்கிறோம். அது குறித்துதான் இன்று வழங்கியிருக்கும் ஆய்வறிக்கை ஆகும். அதன் சாராம்சமும் இது தான்.

இவ்வாறு ஜெ.ஜெயரஞ்சன் செய்தியாளர்களிடம் கூறினார்.

---

## எஜமானர்களுக்கு சாமரம் வீச வீண் அவதூறு!

# தான் ‘டெல்லி அடிமை’ என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறார் பழனிசாமி!

### அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி!

*சென்னை, ஜூன் 11-*

இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அளித்துள்ள அறிக்கை வருமாறு:-

தாம்பரம் அரசு சேவை இல்லத்தில் காவலாளியால் மாணவிக்கு நிகழ்ந்த பாலியல் துன்புறுத்தல் சம்பவத்தில் குற்றவாளி உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளான். மேற்கொண்டு விடுதியில் தங்கியிருந்த 100-க்கும் மேற்பட்ட மாணவிகளிடம் வேறு யாரும் பாதிக்கப்பட்டனரா என தனித்தனியாக விசாரணை மேற்கொள்ளப்பட் டது.

முதல் கட்ட விசாரணையில் வேறு யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என தெரியவந்துள்ளது. இனி அரசு சேவை இல்லங்களில் பெண் காவலாளிகளை நியமிக்க சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.



இக்கொடுமையை மிக துணிச்சலோடு எதிர்கொண்டு புகார் அளித்த மாணவிக்கு இந்த திராவிட மாடல் அரசு என்றும் துணை நிற்கும்.

திராவிட மாடல் ஆட்சியும், முதலமைச்சர் அவர்களும் பெண்களுக்கு அரணாக இருப்பதால் தான் இந்த மாதிரி குற்ற சம்பவங்களை எதிர்த்து தைரியமாக புகார் அளிக்க பெண்கள் முன்வரு கின்றனர். கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில் பாதிக்கப்பட்ட பெண்களே தாக்குதல்களுக்குள்ளாகிய மோசமான சூழல் நிலவியதை தமிழ்நாட்டு பெண்கள் யாரும் இன்னும் மறக்கவில்லை. அப்படிப்பட்ட சூழலை எல்லாம் மாற்றி பெண்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி பெண்களின் முன்னேற்றத் திற்கு துணை நிற்பதோடு பெண்கள் பாதுகாப்பிலும் துளியும் சமரசமற்று செயலாற்றி வருகிறது திராவிட மாடல் அரசு. பெண்களுக்கு எதிரான குற்றங்க ளுக்கு எதிரான தண்டனையை மிகக் கடுமையாக்கியதோடு குற்றவாளிகளை விரைந்து கைது செய்து, விரைவான விசாரணை மேற்கொள்ளப்பட்டு உடனடியாக தண்டனையும் பெற்றுக்கொடுத்து வருகிறது திராவிடமாடல் அரசு. அரசின் இச்செயலையும் காவல்துறையின் செயல்பாட்டையும் உயர்நீதிமன்றமே பாராட்டியும் உள்ளது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கை அ.தி.மு.க. அரசு எப்படி கையாண்டது என்பது நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும்.

அ.தி.மு.க.வை சேர்ந்த குற்றவாளிகளைக் காப்பாற்ற புகார் அளித்த பெண்ணின் குடும்பத்தையே அ.தி.மு.க. குண்டர்களை விட்டுத் தாக்கிய கொடுமையும் அரங்கேறியது.

அப்படி *antiwomen admk government* ஐ நடத்திய பழனிசாமிக்கு, தற்போது குற்றங்களைத் தடுப்பதோடு மட்டுமல்லாமல் குற்றங்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு பெண்களுக்கு ஆதரவாக இருந்துவரும் திராவிட மாடல் அரசைப்பற்றி பேச எந்த தார்மீக உரிமையும் கிடையாது.

இதோ இப்போது கூட அரசு விரைவாக அனைத்து நடவடிக்கையும் மேற்கொண்ட பின்னும் இதன் மூலம் எப்படியாவது டெல்லியின் எஜமானர்களுக்கு சாமரம் வீச, பாதிக்கப்பட்ட மாணவியின் பக்கம் நிற்காமல் அதை வைத்து

அரசியல் செய்யத் தொடங்கி விட்டார் பழனிசாமி. தமிழ்நாடு *Out of Control* என முதல்வர் கூறியதை மடைமாற்றும் வேலையில் இறங்கி உள்ளார் அடிமை பழனிசாமி.

எப்போதெல்லாம் அமித் ஷாவிற்கும் , டெல்லிக்கும் ஆபத்து வருகிறதோ அப்போதெல்லாம் *Delhi Control*லில் இருக்கும் பழனிசாமி ஓடோடி வந்து வீண் அவதூறுகளை பரப்பி காப்பாற்றத் துடிக்கிறார். தான் ‘டெல்லி அடிமை’ என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறார் பழனிசாமி.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி, தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 102 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தீவனூரில் ஆயிரம் நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், ஒன்றிய செயலாளர் மணிமாறன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சம்சுதீன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, தியாகதுருகம் ஒன்றியம் விருகாவூர் பகுதியில் தடம் எண் 12எச் கள்ளக்குறிச்சியிலிருந்து விருகாவூர், ஈய்யனூர் வழியாக கொளவாய் வரை செல்லும் பேருந்து வழிதடத்தில், புதிய அரசு பேருந்தினை கொடியசைத்து துவக்கி வைத்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தார். இந்த நிகழ்வில் ஒன்றிய கழகச் செயலாளர்கள், மாநில,மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,அரசு துறை சார்ந்த அலுவலர்கள் என அனைவரும் உடன் இருந்தனர்.

---

## தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டியில்

# முதல் மூன்று இடம் பெற்ற விளையாட்டு வீரர்கள்!

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் கோப்பையைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்!

*சென்னை, ஜூன் 11-*

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த சைக்கிளிங் குழுவினர் சந்தித்து வெற்றி கோப்பைகளைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

சைக்கிளிங் அசோசியேசன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உதவியுடன் 7.6.2025, 8.6.2025 ஆகிய நாட்களில் 3.75 கி.மீட்டர் நீளமுள்ள தீவுத்திடல் பார்முலா 4 கார் ரேஸ் நடைபெற்ற பாதையில் தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டியை (3வது சீசன்) நடத்தியது. இப்போட்டிகளில் 15 வீரர்கள் வரை கொண்ட வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 8 அணிகள் பங்கேற்றன.

7.6.2025 அன்று TEAM TIME TRIAL சைக்கிளிங் போட்டி 4 சுற்றுகள் கொண்டதாகவும், 8.6.2025 அன்று CRIT RACE சைக்கிளிங் போட்டி 8 சுற்றுகள் கொண்டதாகவும், தீவுத்திடல் பார்முலா 4 கார் ரேஸ் டிராக்கில் நடத்தப்பட்டது.

இந்த போட்டிகளில் RANCYCERS அணியானது 64 புள்ளிகளைப் பெற்று ஒட்டுமொத்த சாம்பியன் கோப்பையை வென்றது .திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திருச்சி Rockfort Riders அணியானது 54 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தையும், சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த நம்ம சென்னை ரைடர்ஸ் அணியானது 38 புள்ளிகளுடன் 3-ஆம் இடத்தையும் பிடித்தன. இந்தப் போட்டிகளில், சைக்கிளிங் வீரர் கிஷோர் இந்த பருவத்திற்கான சிறந்த வீரர் விருதினைப் பெற்றார்.

தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த குழுவினர் நேற்று முன்தினம் (9.6.2025) துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து, வெற்றி கோப்பைகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

இந்த நிகழ்வில் துணை முதலமைச்சர் அவர்கள் சைக்கிளிங் வீரர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் வெற்றிபெற தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யமிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாதரெட்டி மற்றும் தமிழ்நாடு சைக்கிளிங் அசோசியேசன் நிர்வாகிகள், சைக்கிளிங் வீரர்கள் கலந்துகொண்டனர்.

---

## க.இராஜேந்திரன் தலைமை! கொ.நந்தகோபால கிருஷ்ணன் முன்னிலை!

# பண்ருட்டி நகரில் கலைஞர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

### சேலம் கோவிந்தன் சிறப்புரையாற்றினார்!

*பண்ருட்டி, ஜூன் 11-*

பண்ருட்டி நகர தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, நான்காண்டு கால சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சார கூட்டம், பண்ருட்டி அரசினர் மேல்நிலைப்பள்ளி அருகில் மாலை 6 மணி அளவில், சரவணா தியேட்டர் எதிரில் மாலை 7 மணி அளவில், பேருந்து நிலையம் பின்புறம் அன்னை இந்திரா காந்தி சாலையில் 8 மணி அளவில், பண்ருட்டி நகர மன்ற தலைவர் நகரக் கழகச் செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில், கடலூர் மேற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் டாக்டர் கொ. நந்த கோபாலகிருஷ்ணன் முன்னிலையில், தலைமைக் கழகப் பேச்சாளர் சேலம் கோவிந்தன் கலந்து கொண்டு கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்.

மாவட்ட துணைச் செயலாளர்கள் தணிகை செல்வம், ஆனந்தி சரவணன், மாவட்டத் தொண்டரணி அமைப்பாளர் கதிர்காமன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் குணசேகரன் ,நகர அவைத் தலைவர் ராஜா, நகர பொருளாளர் ராமலிங்கம், நகர துணைச் செயலாளர் கௌரி அன்பழகன், மாவட்டப் பிரதிநிதி பிரபு, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பரணி சந்தர், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் ராம்குமார்,

மாவட்ட, கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் சங்கர், நகர துணைச் செயலாளர் சீனிவாசன், சசிகுமார், நகரமன்ற உறுப்பினர்கள் ரமேஷ், முகமது அனிபா, சோழன், அருள், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் தஷ்ணா மூர்த்தி, வார்டு செயலாளர்கள் லட்சுமணன், அந்தோணி, நகர சிறுபான்மை பிரிவு சாதிக் பாஷா, இளைஞர் அணி அமைப்பாளர் சம்பத், தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பாரி, சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் லோகநாதன், விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்கள் ஏழுமலை, செந்தில்குமார்,

வார்டு செயலாளர்கள் முகமது இப்ராகிம், டி.ஆர். ராஜ், நாகப்பன், ராஜா, முருகன் ,செல்வகுமார், சங்கர், கிருஷ்ணமூர்த்தி, ரங்கநாதன், சுரேஷ், அன்பரசு, ஆறுமுகம், பிரபாகரன், பாலமுருகன் குபேந்திரன், நகர இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜா, பாலச்சந்தர்.ராஜ் முகமது. எஸ்.பி.ராஜா, விக்கி, நகர தகவல் தொழில்நுட்ப அணி மோகன்,

நகர இளைஞரணி துணை அமைப்பாளர் பார்த்திபன் நன்றியுரையாற்றினார்.

மற்றும் வார்டு செயலாளர்கள் வட்டப் பிரதிநிதிகள் கழக அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



பண்ருட்டி நகர தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, நான்காண்டு கால சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம், பண்ருட்டி அரசினர் மேல்நிலைப்பள்ளி அருகில் மாலை 6 மணி அளவில், சரவணா தியேட்டர் எதிரிலும், பேருந்து நிலையம் பின்புறம் அன்னை இந்திரா காந்தி சாலையிலும் நடைபெற்றது. பண்ருட்டி நகர மன்றத் தலைவர் நகரக் கழகச் செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில், கடலூர் மேற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலையில், தலைமைக் கழகப் பேச்சாளர் சேலம் கோவிந்தன் கலந்து கொண்டு கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்.